வெள்ளப் பெருக்கைத் தடுப்பதற்கென கட்டுப்படுத்துகைக் கட்டுக்களை நிர்மாணிப்பதற்கான சிபார்சு

ஒவ்வொரு பிரதேசங்களுக்கும் பொருத்தமானதும், குடி மக்களது வாழ்க்கைக்கு மீகக் குறைந்தளவான பாதிப்புகளை ஏற்படுத்தக் கூடிய வகையிலுமமைந்த தொழில் நுட்பத் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய வகையில் ஆற்றங் கரைகளிலிருந்து 0 - 50 அடிகளுக்கிடைப்பட்ட வலயத்திலும், மிகப் பொருத்தமான தூரத்திலும், இடத்துக்குப் பொருந்தும் வகையிலும் 3 - 3.5 மீற்றருக்கிடைப்பட்ட உயரத்தில் கொங்கிரீட்டினால் அல்லது மண்ணினாலான வெள்ளப் பெருக்குக் கட்டுப்பாட்டுக் கட்டுக்களை நிர்மாணிப்பதற்குச் சிபார்சு செய்யப்பட்டுள்ளது. மோதரையிலிருந்து ஹங்வெல்ல வரை ஆற்றின் இரு புறமும் இவ் வெள்ளப் பெருக்குக் கட்டுப்படுத்துகைக் கட்டுக்களை நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. அவ்வாறே கிளை ஆறுகளும், ஏனைய நீரோட்டங்களும் ஆறுடன் இணையும் இடங்களில் புதிதாக வாயிற் கதவுகளைப் பொருத்தும் பணிகளும், தாழ் நிலங்களில் ஒன்று சேரும் நீரை ஓடச் செய்வதற்குத் தடையாகவுள்ள பாலங்களையும், மதகுகளையும், கால்வாய்த் தொகுதிகளையும் தேவையினடிப்படையில் புனரமைப்பதற்கும் சிபார்சு செய்யப்பட்டுள்ளது. இது தவிர, வெள்ளப் பெருக்குச் சந்தர்ப்பங்களில் மேற்குறித்த கட்டுப்படுத்துகைச் சுவர்களுக்கு வெளிப் புறமாக ஒன்று சேரும் மழை நீரை ஆற்றுக்கு விடுவிப்பதற்கென நீரை இறைக்கும் நிலையங்களை நிலை நாட்டி உட் கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்வதற்கும் சிபார்சு செய்யப்பட்டுள்ளது.

குடிகளின் பங்குபற்றுதலுடனான வெள்ளப் பெருக்குக் கட்டுப்பாடு

குடிகளின் பங்குபற்றுதலுடனான வெள்ளப் பெருக்குக் கட்டுப்பாட்டுக்கென காணப்படும் மேலதிக சுவர்களுக்குப் பதிலாகத் தற்சமயம் மிக வலுவுள்ள சுவர்களை நிர்மாணிப்பதற்குச் சிபார்சு செய்யப்பட்டுள்ளது. இந் நிர்மாணிப்புகளை மேற்கொள்வதற்கு இட வசதிகள் தேவையாகவுள்ளது. தொடர்ச்சியாக ஏற்படக் கூடிய வெள்ளப் பெருக்கு அனர்த்தங்கள் காரணமாகப் பாதிக்கப்படும் குடி மக்களைப் பாதுகாப்பதற்கென ஆற்றங் கரைக்கும், உத்தேச வெள்ளக் கட்டுப்பாட்டுக் கட்டுகளுக்கிடையிலான வலயத்திலும் தற்சமயம் குடியேறியுள்ள குடி மக்களையும், வீடுகள் மற்றும் நிர்மாணிப்புகள் உள்ளடங்கிய சொத்துக்களையும் அப் பிரதேசங்களிலிருந்து அகற்ற வேண்டியதன் அவசியம் தொடர்பில் ஆய்வுகளை மேற்கொண்டு அவற்றை இனங் காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

வெள்ளக் கட்டுப்பாட்டுக் கட்டுக்களை நிர்மாணிக்கும் திட்டங்களைத் தயாரிக்கையிலும், நிர்மாணிப்புகள் காரணமாகவும் களனி ஆற்றங் கரைக்கு அண்மையில் வாழும் குடும்பங்களுக்கும், சொத்துக்களுக்கும் மிகக் குறைந்தளவில் பாதிப்புகள் ஏற்படும் விதமாகச் செயற்படுவதற்கு உயரளவில் நடவடிக்கை எடுக்கப்படும். அனர்த்தங்களின் போது பாதிக்கப்படுவோருக்கு உயரளவில் நிவாரணங்களை வழங்குவதற்குக் செயற்திட்டத்தின் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும். அனர்த்தங்கள் காரணமாகக் குடும்பங்களை அகற்ற வேண்டிய நிலை ஏற்படுமிடத்து பாதிக்கப்படும் அனைத்துக் குடும்பங்களுக்கும், தனி நபர்களுக்கும், கருத்திட்டங்களுக்கும், நிர்மாணிப்புகளுக்கும் தேவையான நிவாரணங்களை வழங்கும் செயற்பாடுகளும், நட்ட ஈடுகளைச் செலுத்தும் செயற்பாடுகளும் மேற்கொள்ளப்படும்.

இச் செயற்பாட்டுக்கான பொறுப்பு அரசுக்குரியதாகக் காணப்படுவதுடன், குடிகளுடன் சமூகமாகக் கலந்தாலோசித்து கருத்திட்டப் பணிகளைச் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இக் கருத்திட்டத்தைச் செயற்படுத்துகையில் ஏற்படக் கூடிய பிரச்சினைகளைக் குடிகளுடன் சமூகமாகக் கலந்தாலோசித்து தீர்ப்பதற்கென குழுவொன்றை நியமித்து முறையாகத் தீர்வுகளைப் பெற்றுக் கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

வெள்ளப் பெருக்குக் கட்டுப்பாட்டுச் சிபார்சுகளைச் செயற்படுத்துவதன் பலன்கள்

- உயர வாழ்க்கை வசதிகளுடன் கூடியதாகப் பாதுகாப்பு மிக்க புதிய சூழலொன்றில் வாழக் கூடிய வாய்ப்பு ஏற்படுதல்.
- வெள்ளப் பெருக்கு அபாய நிலை குறைவடைந்து உயிர்களும், சொத்துக்களும் பாதுகாக்கப்படுதல்.
- களனி ஆற்றுப் படுக்கை உயரளவில் பாதுகாக்கப்பட்டு நாட்டின் பொருளாதாரம் வலுவடைதல்
- உயர நீரேந்துப் பிரதேசங்களில் நீர்த்தேக்கங்களை நிர்மாணிப்பதன் மூலம் தேசிய மின் வலுத் தொகுதிக்கு மேலதிகமாக மின்சாரம் ஒன்று சேர்க்கப்படுதல், குடி நீரைப் பெற்றுக் கொடுத்தல், நீர்ப்பாசத்துக்கான நீரைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் மேலதிக நீரை நீர்த்தேக்கங்களுக்குத் திசை திருப்புதல்.

எமது பொறுப்பு

மலை நாட்டுக்கு அடை மழை கிடைக்கும் போது தாழ் நிலமான களனி பிரதேசத்தில் வாழும் குடி மக்கள் தமக்கும் வெள்ளப் பெருக்கு அனர்த்த நிலைக்கு முகங் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படுமென அச்சமடைந்தனர். ஆற்றின் இரு புறமும் வாழும் நீங்களும், நாமும் ஆகிய நம் அனைவரும் ஒருமித்து ஒரே குரலில் வெள்ளப் பெருக்கைக் கட்டுப்படுத்துவதற்கு எமது பங்களிப்பைப் பெற்றுக் கொடுக்க வேண்டியவர்களாகவுள்ளோம். இதற்கும் காரணம் எமது பிள்ளைகளுக்கும், சொத்துக்களுக்கும், தோட்டங்களுக்கும், வணிக நடவடிக்கைகளுக்கும், உயிர்களுக்கும் வெள்ளப் பெருக்கு பாரிய அழிவை ஏற்படுத்துவதேயாகும். இவை அனைத்தையும் பாதுகாக்கும் பொறுப்பு எமக்கேயுள்ளது. இதற்கென நாமே முன்னின்று செயற்பட வேண்டியவர்களாகவுள்ளோம். வெள்ளப் பெருக்குக்கென இதுவரை எடுக்கப்பட்ட அனைத்துத் தற்காப்பு நடவடிக்கைகளும் தற்காலிகமானவையாகக் காணப்படுவதால், நீண்ட காலத் தீர்வுகளைப் பெற்றுக் கொள்ளக் கூடிய அனைத்துச் செயற்பாடுகளுக்கும் எமது ஒத்துழைப்பை வழங்க வேண்டியவர்களாகவுமுள்ளோம். காலத்தின் மிக முக்கிய தேவையான இப் பணியைத் திட்டமிடுவதற்கும், செயற்படுத்துவதற்கும் கால நிலை மாற்றத்தை எதிர் கொள்ளும் செயற்திட்டம் நடவடிக்கை எடுப்பதுடன், அதற்கென அனைத்துத் தரப்பினரதும் பங்களிப்பும் எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

நீங்கள் எவ்வாறு உதவலாம்?

- அறிவூட்டும் நிகழ்ச்சிகளில் பங்கு பற்றி தொடர்புடைய அரச உத்தியோகத்தர்களிடமிருந்து சரியான தகவல்களைப் பெற்று பொருத்தமான முறையில் தெளிவடைவதன் மூலம்,
- உங்களது வீடுகளுக்கு வருகை தரும் ஆய்வுகளிலீடுபடும் குழுக்களுக்குப் பொருத்தமான முறையில் ஆய்வுகளுக்குத் தேவையான சரியானதும், உண்மையானதுமான தகவல்களை வழங்குவதன் மூலம்,
- பிரச்சினைகள் ஏற்படுமிடத்து பொருத்தமான செயற்பாடுகளைப் பின்பற்றிய வண்ணம் அவை தொடர்பில் கலந்தாலோசித்து விரைவில் அவற்றைத் தீர்த்துக் கொள்வதற்கு உதவுவதன் மூலம்,
- எமதும், எமது பிள்ளைகளினதும் எதிர்க் காலத்துக்கென மேற்கொள்ளப்படுகின்ற செயற்பாடுகள் எனும் சரியான தூர நோக்குடன் தேவையான அனைத்து உதவிகளையும் விரைவில் பெற்றுக் கொடுப்பதன் மூலம்

இதற்கு முன் ஏற்பட்ட அனர்த்தங்களின் போது பாதிப்புக்குள்ளானவர்களுக்கு அப் பாதிப்புகளிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்கு உதவியதைப் போன்று மீண்டும் அனர்த்தங்கள் ஏற்படாதிருப்பதற்கும், அத்தகைய அனர்த்தங்களைக் குறைப்பதற்கும் முடிந்தளவில் பங்களிப்பை வழங்குவதன் மூலம் எமக்குள்ள பாரிய தேசிய பொறுப்பை இனிதே நிறைவேற்றுவோம்.

பிரச்சினைகள் ஏற்படுவதற்குரிய பங்குதாரிகளாகவன்றி, தீர்வுகளுக்கான உண்மையான பங்குதாரிகளாகச் செயற்படுவோம்.

காலநிலை மாற்றத்தை எதிர் கொள்ளும் செயற்திட்டம்
நீர்ப்பாசனம், நீர் வளங்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு
இலக்கம் , ஜாவத்த வீதி, கொழும்பு 05
தொலைபேசி - 0112058451, இணைய தளம் -www.crip.lk

வெள்ளப் பெருக்கு அனர்த்த நிலையிலிருந்து நீங்குவதற்கு.....

காலநிலை மாற்றத்தை எதிர் கொள்ளும் செயற்திட்டம்
நீர்ப்பாசனம், நீர் வளங்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு

CRIP
கால நிலை மாற்றத்தை எதிர் கொள்ளும் செயற்திட்டம்

அண்மைக் காலமாக ஏற்பட்டுள்ள சீரற்ற கால நிலை மாற்றங்கள் காரணமாக இலங்கையில் பாரியளவில் இயற்கை அனர்த்தங்கள் ஏற்பட்ட வண்ணமுள்ளன. அவற்றுள் சூறாவளி, புயல், மண் சரிவு, வரட்சி மற்றும் வெள்ளப் பெருக்கு ஆகிய அனர்த்தங்கள் மிக முக்கிய பங்கு வகிக்கின்றன. இந் நிலைக்குத் தீர்வு காண்பதற்கென 2014 ஆம் ஆண்டு கால நிலை மாற்றக்கை எதிர் கொள்ளும் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதுடன். இது நீர்ப்பாசனம்,66ளுளுளுள் நீர் வளங்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் மூலம் செயற்படுத்தப்படுகின்ற அரசுக்குறிய செயற்திட்டமொன்றாகவும் காணப்படுகின்றது.

செயற்திட்டத்தின் முதல் கட்டத்தின் கீழ் கால நிலை மாற்றங்கள் காரணமாக ஏற்படக் கூடிய இயற்கை அனர்த்தங்களுக்கும், அழிவு நிலைகளுக்கும் முகங் கொடுப்பதற்குத் தேவையான தீர்வுகளை இனங் காண்பதற்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டு அவற்றைச் செயற்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்ட வண்ணமுள்ளன. கருத்திட்டம் மிகப் பரந்தளவீலான இரண்டு நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு செயற்படுத்தப்படுகின்றது. அந் நோக்கங்களாவன :

- கால நிலை மாற்றங்கள் காரணமாக ஏற்படக் கூடிய வரட்சி நிலைக்கும், வெள்ளப் பெருக்கு நிலைக்கும் முகங் கொடுத்துள்ள உயிர்களுக்கும், சொத்துக்களுக்கும் ஏற்படக் கூடிய ஆபத்துகளை இயன்றளவில் குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- அத்தகைய அனர்த்தங்கள் ஏற்படுமிடத்து அவற்றுக்கு வெற்றிகரமாக முகங் கொடுக்கக் கூடிய திறனை விருத்தி செய்தல்.

ஆற்றுப் படுக்கை அபிவிருத்தி முதலீட்டுத் திட்டங்கள்

களனி ஆற்றுப் படுக்கையும் உள்ளடக்கப்பட்டதாக அனர்த்தங்கள் ஏற்படக் கூடிய அபாயமுள்ள 10 ஆற்றுப் படுக்கைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவற்றுக்குள்ள அபாயங்களைக் குறைப்பதற்கென நீண்ட காலத் தீர்வுகளைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் கருத்திட்டத்தின் மூலம் ஆற்றுப் படுக்கை அபிவிருத்தித் திட்டங்கள் தயாரிக்கப்படுகின்றன. கருத்திட்டத்தின் முதல் கட்டத்தின் கீழ் தயாரிக்கப்படுகின்ற திட்டங்கள் முன்னுரிமை அடிப்படையிலும், நிதி முதலீட்டுத் திறனுக்கு அமையவும் கருத்திட்டத்தின் இரண்டாம் கட்டத்தின் மூலம் முன் கொண்டு செல்லப்படும்.

அரசின் முயற்சி

அண்மைக் காலமாகக் கால நிலை மாற்றங்கள் காரணமாகப் பரந்தளவில் வியாபித்த வண்ணமுள்ள அனர்த்தங்களின் மூலம் பொது மக்களது வாழ்க்கைக்கும், சொத்துக்களுக்கும் பாரியளவில் அழிவுகள் ஏற்பட்ட வண்ணமிருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது. இதனால் வரட்சி மற்றும் வெள்ளப் பெருக்கு அனர்த்தங்களுக்கென அரசுக்கு வருடாந்தம் ரூபா 55000 மில்லியன் பணத் தொகையைச் செலவழிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. வெள்ளப் பெருக்கு காரணமாக நாட்டின் வர்த்தகச் செயற்பாடுகளுக்கும், கல்விச் செயற்பாடுகளுக்கும், சுகாதாரத்துக்கும், பொது மக்களது அன்றாட வாழ்வாதாரத்துக்கும், நாட்டின் பொருளாதாரத்துக்கும், சமூகத்துக்கும் ஏற்படக் கூடிய பாதிப்புகள் அதிகரித்த வண்ணமுள்ளன. வெள்ளப் பெருக்கு நிலை காரணமாக ஏற்படக் கூடிய அழிவுகளைக் குறைப்பதற்கென அரசு நீண்ட காலத் தீர்வுகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்த வண்ணமிருப்பதுடன், களனி ஆற்றின் வெள்ளப் பெருக்கு நிலையைக் கட்டுப்படுத்துவதற்குத் தேவையான ஆய்வுகளை மேற்கொண்டு, திட்டங்களைத் தயாரிப்பதற்குக் கால நிலை மாற்றத்தை எதிர் கொள்ளும் செயற்திட்டம் நடவடிக்கை எடுத்துள்ளது.

களனி வெள்ளப் பெருக்கு காரணமாக 2016 ஆம் ஆண்டில் ஏற்பட்ட அழிவுகள்

2016 ஆம் ஆண்டில் ஏற்பட்ட வெள்ள பெருக்கு அனர்த்த நிலை காரணமாக நாட்டின் பல பிரதான துறைகளுக்குப் பாரியளவில் பாதிப்புகள் ஏற்பட்டன. களனி ஆற்றுடன் தொடர்புடையதாக ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு நிலை காரணமாக 93,444 குடும்பங்கள் (393,833 தனி நபர்கள்) அனர்த்தங்களுக்கு உள்ளாகின. பல வீடுகள் நீரினுல் மூழ்கியதுடன், போக்குவரத்து, சுகாதாரம், கல்வித் துறை மற்றும் பொது மக்களது நாளாந்த வாழ்க்கைக்கும் தடைகள் ஏற்பட்டன. இது தவிர, பல உயிர்ச் சேதங்களும் ஏற்பட்டன. களனி ஆற்றுப் படுக்கையிலிருந்த வீடுகளில் அழிவுக்குள்ளான பல வீடுகள் கொலொன்னாவை பிரதேசச் செயலாளர் பிரிவிற்குறியவாகக் காணப்பட்டன.

களனி ஆற்றின் தாழ் நிலப் பிரதேசத்துக்குறிய பாதுகாப்பு வலயத்திலும். தாழ் நிலங்களிலும் அழிவுக்குள்ளான 25,287 வீடுகளுக்குப் பதிலாகப் பொருத்தமான பிற இடங்களில் புதிதாக வீடுகளை நிர்மாணிப்பதற்கென ரூபா 77 மில்லியன் பணத் தொகை செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறே களனி ஆற்றின் வெள்ளப் பெருக்கு நிலை காரணமாக கொலொன்னாவை, கடுவெல மற்றும் களனி ஆகிய பிரதேசங்களில் பாதிப்புக்குள்ளான பாடசாலைகள் மூன்று வார காலமாக மூடப்பட்டிருந்தன. கொழும்பு மாவட்டத்தின் கடுவெல பிரதேசச் செயலாளர் பிரிவிலிருந்த சிறு மற்றும் நடுத்தர அளவிலான தொழிற் சாலைகளுக்கு ஏற்பட்ட அழிவுகளின் பெறுமதி ரூபா 600 மில்லியனென கணிப்பிடப்பட்டுள்ளது. கொழும்பு மற்றும் கம்பஹாவின் வெள்ளக் கட்டுப்பாட்டுக்கென நிர்மாணிக்கப்பட்டிருந்த கட்டுக்களுக்கும், நிர்மாணிப்புகளுக்கும் ஏற்பட்ட அழிவுகளின் பெறுமதி ரூபா 140 மில்லியனாகக் காணப்பட்டது.

களனி வெள்ளப் பெருக்கு நிருவகிப்புக்கான ஆய்வுகள்

2016 ஆம் ஆண்டிலும், அதற்குப் பிற்பாடும் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு காரணமாக அரசு களனி ஆற்றுப் படுக்கைக்கென வெள்ளக் கட்டுப்பாட்டுத் திட்டங்களைத் தயாரிக்கும் பணிகளைத் துரிதமாக ஆரம்பித்தது. கருத்திட்டத்தின் மூலம் களனி வெள்ளப் பெருக்கு நிருவகிப்புக்குத் தேவையான ஆய்வுகளை மேற்கொண்ட வண்ணமும், அனர்த்தங்களுக்கு முகங் கொடுக்கக் கூடிய செயற்பாடுகளை இனங் கண்ட வண்ணமும் அவற்றைச் செயற்படுத்துவதற்குத் திட்டங்கள் வகுக்கப்பட்ட வண்ணமுள்ளன. களனி ஆற்றுப் படுக்கை தொடர்பில்

- சூழல் ஆய்வுகளையும், புவிச் சரிதவியல் நீர் ஆய்வுகளையும் மேற்கொள்ளல்,
- சமூக, பொருளாதாரத் திட்டங்களுக்கான கணிப்பீடுகளை மேற்கொள்ளல்,
- வெள்ளப் பெருக்குக் கட்டுப்பாட்டுக்கான கட்டுக்களை நிர்மாணிக்கும் தீறனைக் கண்டறிதல்,
- ஆற்றிலுள்ள தடைகளை அகற்றுதலும், தடைகளாகவுள்ள இடங்களை விஸ்தீரணப்படுத்தக் கூடிய திறனைக் கண்டறிதலும்,
- மீள் குடியேற்ற வேண்டிய தேவையை ஆய்வு செய்த வண்ணம் அதற்குரிய திட்டங்களைத் தயாரிக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்ட வண்ணமுள்ளன.

களனி வெள்ளப் பெருக்குக் கட்டுப்பாட்டுக்கான சிபார்சு

தற்சமயமுள்ள வெள்ளப் பெருக்குக் கட்டுப்பாட்டுக்கான கட்டுக்களுக்கு மேலதிகமாகப் புதிய கட்டுக்களை நிர்மாணிப்பதற்குச் சிபார்சு செய்யப்பட்டுள்ளது.

அனைத்துப் பங்குதாரிகளுடனும் கூட்டிணைந்து அறிவூட்டல் நிகழ்ச்சிகளையும், கருத்துக்களைப் பெற்றுக் கொள்ளும் நிகழ்ச்சிகளையும், கலந்தாலோசிப்புகளையும் மேற்கொண்டு, பிற்பாடு பாதிப்புக்குள்ளான குடிகளைக் குறைந்த எண்ணிக்கையில் அகற்றிய வண்ணமும், பொருளாதார மற்றும் சமூக ரீதியில் சாத்தியமுடையதாகவும். இடத்துக்குப் பொருத்தமான முறையிலும் வெள்ளப் பெருக்குக் கட்டுப்பாட்டுக்கான கட்டுக்கள் நிர்மாணிக்கப்படும்.